குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்:

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 22-7-58 செவ்வாய் | இசை: 8

பெரியார் சொல் வெல்கவே!

காலையிலே உணவருந்தி வேலைக்குச் சென்றேன்
கடைத்தெருமேற் செல்லுகையில் இருவர் எனை நோக்கி
வேலெறிந்த தைப்போலே விட்டெறிந்த சொற்கள்
விளைத்தமனத் தொல்லையினை என்னென்று சொல்வேன்
"சேலோடு வில் புலி உயர்த்தோர் வழிவந்தேன் என்பான்
செந்தமிழ்நாட் டடிமை இவன்" என்றுசொல்லிப் போனார்
வேலைக்கு நேரந்தான் ஆயிற்றே என்று
விரைவாக நான் நடந்தேன். குறுக்கிட்டான் ஓர் ஆள்!

காங்கிரசு மேன்மையினை மிகவாகச் சொன்னான்
கதைமுடிந்த பின்என்றன் ஆதரவு கேட்டான்
காங்கிரசை ஆதரித்தால் என்னவரும் என்றேன்
கைநிறையச் செல்வம்வரும் என்றுரைத்தான். நானும்
தீங்கரசை ஆதரித்தால் செருப்படியும் வருமே!
எனச்சொல்லிச் செல்லுகையில் ஒருநொண்டிப் பார்ப்பான்
நாங்கள்தாம் சரியாக நடப்பவர்கள் என்றான்
நகைக்காமல் மற்றவர்கள் நொண்டிகளோ என்றேன்.

அனைத்துலகக் கட்சி இது! மக்களெலாம், உடைமை
அனைத்தையுமே பொதுவாக அடையவைக்கும் கட்சி!
தினைத்துணையும் பொதுப்பணத்தைத் திருடாத கட்சி!
தெரிந்தவரைத் தெரியாமற் கொலைசெய்யாக் கட்சி!
மனைவி நீ! கணவன் நான் என்றுசோ றுண்டு
மங்கையரை ஏமாற்றிப் பிள்ளைகொடுத் தோடும்
புனைசுருட்டுக் காரரிலாப் பொன்னான கட்சி!
போடிந்த உண்டியிலே பணம் என்றான் மேலும்,

இவ்வூரார் நிலத்தையெலாம் வீடுகளை யெல்லாம்
எண்ணி எண்ணிப் பார்த்ததிலே உன்றன்விழுக் காடு
நெய்வேலி சேர்ந்தாப்போல் நன்செய்ஒரு வேலி.
நீஇருக்கும் கூரையண்டை மாடிவீ டொன்றும்
இவ்வாரம் உன்பேருக் காக்குவதாய் எங்கள்
ஊர்க்குழுவி னோரெல்லாம் தீர்மானம் செய்தார்
உன்குடும்பம், நாளைவரும் தேர்தலிலே எம்மை
ஒரேயடியாய் ஆதரிக்க வேண்டுமென்று சொன்னான்.

விட்டாலே போதுமென்று விரைவாக நடந்தேன்
விடமாட்டேன் உன்னைஎன மற்றொருவன் வந்தான்
"பட்டாளத் தலைமைமட்டும தில்லிக்கு வேண்டும்
பார்ப்பானை அணுவளவும் திட்டுவதே இல்லை
ஒட்டாக மாகாண உரிமைமட்டும் தேவை
உயர்தமிழும் தேவை அதில் வடமொழியும் வேண்டும்
தட்டாமல் எம்மைநீ ஆதரித்தால் போதும்"
தமிழரசுக் கழகத்தான் இவ்வாறு சொன்னான்.

அரிவாளும் நெற்கதிரும் அடையாளங் காட்டி
அடுத்தொருவன் வந்தென்னை நடுத்தெருவில் நிறுத்தி
எரிவெய்யில் கால்களையும் தலையினையும் தீய்த்தே
எரிக்கின்ற நேரத்தில் காதினையும் எரித்தான்
தரவேண்டும் ஆதரவு தரவேண்டும் என்றான்
சரிஎன்றேன் விடவில்லை ஒரேஓட்ட மாகத்
தெருத்தாண்டிப் போகையிலே தோழரே என்று
செப்பியது காதில்விழத் திரும்பினேன் அங்கே

தி மு கவென்று சொன்னபடி சிரிக்குமுகக் குள்ளத்
திருமேனி ஒன்றுநின்ற ததனைநான் கண்டேன்
நமதுகழ கத்திலே நீசேர வேண்டும்
நடிக்கவைப்போம் சினிமாவில், கதைஎழுதச் செய்வோம்
கமழும்உன் பேர்இந்தக் கண்ணில்லா நாட்டில்!
கலைஞன் நீ ஆகலாம் கவிஞன் நீ ஆகலாம்
எமதன்றோ இந்நாடு? சட்டசபை போக
எண்ணமா அடுத்தநொடி பார்த்துக்கொள் என்றான்.

ஓடத்தான் வழிபார்த்தேன் விட்ட பாடில்லை
உயர்சினிமாக் கம்பெனியாம் வாஎன்று சொன்னான்
நாடகமாம்! கம்பெனியாம்! வாஎன்று சொன்னான்
நங்கைமார் அழகழகாய் உண்டென்றான் பாவி.
போடாநீ என்றுரைத்தேன் போனபா டில்லை
புறத்தினிலே இழுத்தெறிந்தேன் போகவழி பார்த்தேன்
நாடோடி நாயொன்று குரைத்த தெனைப்பார்த்து
நடுங்கினேன் இதுவுமொரு கட்சியோ என்றே.

தொடர் 4 ஆம் பக்கம்

இருதலைக்கொள்ளி

ஈராக்கில் நடந்த ராணுவப் புரட்சி, வளர்ந்துவரும் அரபு தேசியத்திற்கு அறிகுறி.

அதைப்பற்றி நான் மேலும் ஒன்றும் தெரிவிக்க விரும்பவில்லை.

பெரும் நாடுகள் இதை உணர்ந்து கொள்வது கடினம் அவர்களுக்கு நான் புத்தி கூற முடியாது.

வல்லரசுகள் போரில் இறங்கலாம்.

ஆனால் நாம் பங்குகொள்ள முடியாது. அதன் விளைவுகளிலிருந்தும் தப்ப முடியாது.

—இப்படிக்கு " ஆசியஜோதி "

உயிர் வருமாம்!

மந்திரி சபை அமைப்பைக் குறித்துடெல்லியில்பேச்சுநடத்தி விட்டுத் திரும்பிய காங்கிரஸ் கட்சித் தலைவர் குபேர்: "காங்கிரஸ்காரர்களுக்குள் இருந்த தகராறு விரைவில் தீர்ந்துவிடும். காங்கிரஸ் தலைவர்கள் மந்திரி சபையை அமைப்பதுபற்றி மிக்க ஆர்வம் காட்டுகின்றார்கள். மேற்படி சபையமைப்புக்குச் சென்னை முதல்வர் திரு.காமராசர் அவர்களை ஆலோசனை கூற மேலிடம் அதிகாரம் அளித்துள்ளது" என்ற செய்தியை அறிவித்திருக்கிறார்.

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி உ.

இடம் : *பாண்டிய நாட்டுத் தலைநகராகிய உறையூரில் அரண்மனை நிலா முற்றம்.*

நேரம் : *முன்னிரவு.*

கதை உறுப்பினர் : *பாண்டியன் அறிவுடை நம்பி, அரசி, பிறர்.*

காட்சித் தலைப்பு :

வேலமரம் பந்து

ஆலமரம் அம்மானைக்காய்

***நிகழ்ச்சி:** நிலா முற்றத்தில் அரசன் அரசி நின்று காற்று மழையின் நிலை காணுகின்றார்கள்.*

பாண்டியன் : தூங்காமணி விளக்கைத் தூக்கிக்கொண்டு ஓடிய கள்ளனைப்போல் வெள்ளிய நிலாவை அள்ளிக்கொண்டு போய் மறைத்தது கருமுகில்.

நள்ளிருள் உலகுக்குத் திரையிட்டது.

பாண்டி மன்னி : ஒன்றையொன்று தொடரும் கடலலைபோல் அந்தக் கருமுகிற் கூட்டம் தட தட வென்று தாளத்தோடாடித் தக தக வென்று மின்னலைச் செய்தது அத்தான்!

பாண்டியன் : இதுவரைக்கும் நடந்த கதை இது! இப்போது பார்! காற்றும் மழையும் கைகோத்து ஆடி மகிழ்ந்தபடி துடுக்குத் தனத்தையும் தொடங்கி விட்டன. என்ன இது? பூக்களின் இதழும் ஈக்களின் குரலும் நனைந்தன மேலும் நடுங்கின.

பாண்டி மன்னி : அத்தான்! அத்தான்! புன்னை மரங்கள் புரளுகின்றன தரையில். தென்னை மரங்கள் சிரிக்கின்றன வானில்.

பாண்டியன்: துன்ப அறிவிப்பா! (*மணி ஓசை கேட்டு*) ஓடிவிடு கண்ணே உன் அறைக்கு! ஆராய்ச்சிமணி அலருகின்றதே!

(அரசன் வெளி நோக்கிச் செல்ல அடி எடுக்கின்றான்.)

மன்னி– நீங்கள் போகவேண்டாம் (*நடுங்கும் விழி. மறுக்கும் அங்கை.*)

மன்னன்– வேறு? (*கண்ணிற் சினம்*)

மன்னி– ஆட்களை அனுப்பலாமே.

மன்னன்– அதற்கும்?

மன்னி– நீங்களா? எதற்கு? உங்கட்கு ஒன்று நேர்ந்தால்!

மன்னன்– மக்கட்கு என்ன நேர்ந்தாலும் நேரட்டும். எனக்கு மட்டும் ஒன்றும் நேர்ந்துவிடக்கூடாது. அதுதானே உன் குறுகிய நோக்கம். தீமை வந்தபோது காட்டிக்கொடுக்கும் தீயவனா நான்? காற்றென்றும் மழை என்றும் வந்த கடுங்கூற்றின் உடலை என் வாள் இரு கூறாக்கவேண்டும். அல்லது அக்கூற்று என் தலையைச் சுக்கல் நூறாக்கவேண்டும்.

(அரசன் செல்லுகின்றான். அவள் மறுக்கின்றாள். கை விலக்குகின்றான் மன்னன். மெய் சாய்கின்றாள் மன்னி. போய் விட்டான்.)

மற்றொருபுறம்

அரண்மனையின் புறவாயில் படீரென்று திறக்கப்படுகின்றது. அரசன் வெளிவந்து பார்க்கின்றான். யானைமேல் நின்று ஆராய்ச்சிமணி அசைத்த ஓர் உருவம் தூக்கி எறியப்படுகின்றது காற்றால்! பாய்ந்து பற்றப்போன அரசனும் தூக்கி எறியப்படுகின்றான் மற்றொருபுறம். மற்றொருவன், வீழ்ந்துகிடக்கும் ஆலின் பெருங்

கிளையை அணைத்தபடி வாயசைப்பது தெரிகின்றது. பேசுவது கேட்கவில்லை.

மற்றொருபுறம்

பலர் ஒரு வீட்டில் பந்தம் கொளுத்துகிறார்கள். அவை கொளுத்தும்போதே அவிகின்றன. சில கொளுத்திய பின்பு குப்பென்று அவிகின்றன.

மற்றொருபுறம்

இடிமுழக்கம் கேட்கின்றது. மழை மண்ணைக் குழிவு செய்கின்றது. மின்னுதபோது இருண்டிருக்கும் உலகு மின்னுகின்றபோது ஒளி பெறுகின்றது.

ஒரு மின்னலில்: வேலமரம் பந்தாடப் படுகின்றது வேரறுபட்டு.

மற்றொரு மின்னலில்: ஆலமரம் அம்மானைக் காய்.

மற்றொருபுறம்

பலகணி சாத்தப்பட்ட அறை. அவ்வறையில் அவியாது அங்கையால் அணைக்கப்பட்ட விளக்கு. அவ்விளக்கொளியில் இரு மங்கையர் தோற்றமளிக்கின்றார்கள். அரசி அங்கம் நடுங்குகின்றாள். கண்ணீர் கலங்குகின்றாள். தோழி ஆடாத அசையாத அச்சுப்பாவை.

அரசி நூறாவது தடவையாகப் பலகணி திறந்து வெளியே கை நீட்டுகின்றாள்.

அரசி: காற்றுத் தணிந்தது சற்று!
மழையும் மட்டு! மட்டு!

தோழி: (*கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சிரிக்கிறாள்*) இனி அஞ்ச வேண்டியதில்லை.

அரசி: அரசர் நிலை என்ன ஆயிற்றோ!

மற்றொருபுறம்

தெரு. விழுந்த மரங்களால் போர்த்தப் பட்டுக் காட்சியளிக்கின்றது. பாண்டிய மன்னன். பந்தங்கள் ஏந்திய வீரர்கள். பிசிராந்தையார். புலவர் மேற்படியார் ஆகியோர் மக்கள் நிலைகாணச் செல்லுகின்றார்கள்.

அரசன்: மக்கள் நிலை என்ன ஆயிற்றோ?

புலவர் மேற்: அரசர் அஞ்சவேண்டியதில்லை. மக்கள் காற்றுமழையில் வெளியில் வந்திருக்கமாட்டார்கள். வீட்டினுள்ளேயே இருந்திருப்பார்கள். அவர்கள் யானைமேலிருந்து வானமேற் சுழன்று மரக்கிளைகளால் தாக்குண்டு மேற்கொண்டு மண்ணுண்டு நாமுண்டு என்று வீழ்ந்து உருண்டு புரண்டு கிடந்திருக்க மாட்டார்கள்.

அரசர்: (*சிரித்து*) புலவர் பெருமான் கிடந்த நிலையைக் காண என் கண்கள் நடுங்கின, உலகின் முடிவை நினைப்பூட்டிக் கொண்டிருந்தன காற்றும் மழையும். அந்த நிலையிலும் வெளிவந்தீர்கள்.

புலவர்: அதிலும் யானை மேல் ஏறிக் கொண்டு! இவர்பதினெட்டு ஆண்டு மாப்பிள்ளை யல்லவா.

பிசிராந்தையார்: ஏன்காணும் மேற்படியாரே வீழ்ந்துகிடந்த ஆலின் கிளையை அணைத்தபடி இருந்தவர் நீர்தாமோ!

மேற்: வேறு?

பிசிரா: பிறகு?

மேற்: ஆலமரம் என்னை இழுத்தது. விட்டு விட்டேன். வேலமரம் வரவேற்றது உடம்பின் செங்குருதி குடிப்பாட்டி. அதையும் அனுப்பினேன். ஆலும் வேலும் மேலே கிளம்பின.

பிசிரா: யானை!

மேற்: அதையும் தூக்கிக்கொண்டுதான்.

அரசர்: (*தாங்கமுடியாத சிரிப்புக் கிடையில்*) புலவர் பெருமான் வீட்டுக்குப் போகலாமே.

பிசிரா: துன்பத்திற்கு மேல் துன்பம்.

அரசர்: இங்கே?

பிசிரா: மேற்படியாரின் நகைச்சுவை, துன்பத்தை நீக்கி விடுகின்றது.

மேற்: யானையும் போனதே நடக்கவும் ஆனதே ஐயா

எங்கள் தமிழ்!

வித்துவான், தெ. ஜெயராமன்.

இன்பமளித்திடும் எங்கள் தமிழ் —எங்கும்
இல்லாத அமுது தங்குந் தமிழ்
தன்னிகரில்லாமல் ஓங்குந் தமிழ் – எங்கள்
செந்தமிழ் நாட்டினர் செல்வத் தமிழ்
மன்னுநி மன்னர் முடிவணங்கித் – தமிழ்
வாணர்க்கு மாண்புகழ் தந்த தமிழ்
பொன்பொருள் வாரி வழங்கிடுவோர் – வள்ளல்
புகழ்பெறச் செய்ததும் எங்கள் தமிழ்
குண்டல ஆட்டத்திற் கேற்றமணி – இசை
கூட்டுஞ் சிலம்படி கொண்டவளாய்
எண்ணத்தை யீர்க்கும் வளையணிந்தாள் – தமிழ்
பெண்ணரசி கலை மின்னிடவே
தென்மதுரைச் சங்கச் சோலையிலே – தமிழ்
வண்ண மலரொன்று பூத்த தம்மா
தென்னவர் வாழ்வு வளம் பெறவே – அந்தத்
தேன்மலரின் மணம் வீசுதம்மா!

பிசிரா: நடப்போம். மக்கள் நிலை என்ன ஆயிற்றோ!

மேற்: உங்களை ஒன்று கேட்க எண்ணு கின்றேன். காற்று மழை வலுத்தன. நாட்டு மக்கள் இல்லையா? நான் இல்லையா? நீர் என்ன ஆராய்ச்சி மணியை அசைக்கக் கிளம்பியது! நீவிர்தாம் நாட்டு மக்களைக் காப்பவரோ?

அரசர்; வேறுயார் புலவரே! பாண்டிநாட்டில் எல்லோரும் நல்லவர் எல்லோரும் செல்வர் என்ற நிலை ஏற்பட அல்லும் பகலும் தொண்டு செய்தது ஓர் ஆற்றல்! என் அறிவுக்கு மெருகு- என் ஆற்றலுக்கு ஊட்டம் இவர்கள்! எவரை நான் இழக்கமுடியாதோ அவரை நான் இழந்து விடவில்லை. காற்று மழை ஏமாந்தன. மீண்டும் பெற்றேன் என் ஆற்றலை-அறிவை.

மேற்; வாழ்க பாண்டியர் அறிவுடை நம்பியார்

பிசிரா: அரசர் இந்தத் தொல்லையினின்று அரண்மனை செல்லலாமே அங்கு அரசியார் நிலை என்ன என்று அறியவேண்டாமா!

அரசர்: ஒன்றும் நேர்ந்திராது. நடப்போம்.

★

தம்பி!

[புலவர் "மதி" திண்டிவனம்]

சிந்தனை செய்துமே பார்த்திடடா – த
சிந்துகண் ணீரைநீ தீர்த்திடடா
வந்தோர் மொழியது வாழ்ந்திடவோ –
வாழ்ந்தோர் மொழியது வீழ்ந்திடவா?
ஆண்ட மொழியதும் செந்தமிழே – இ
ஆளத் தெரிந்ததும் நம் மொழியே
ஈண்டுவந் தோர்மொழி இந்தியதே – தமிழ்
அன்னையை வீழ்த்திடும் செந்தீயதே
செந்தமிழ் அன்னையும் இங்கிருக்கத் – தம்பி
சொந்தங்கொண் டாடிட இந்தியுமேன்
தீங்கனி செந்தமிழ் கையிருக்கத் – தம்பி
தீமையைத் தந்திடும் எட்டியுமேன்
செந்தமிழ் தீமையும் எய்தியபின் – தமிழ்ச்
சேய்களும் வாழ்ந்தொரு லாபமுண்டோ
உந்தி எழுந்திடு சிங்கமென – இந்தி
ஓட விரட்டிப்பின் ஓய்வுகொள்வாய்
இந்தியை ஓட்டிடின் தாய்நாடு – மணம்
எங்குமே வீசிடும் பூக்காடு
செந்தீ யெனுமிந்தி வந்துபுகின் – தமிழ்
செத்தபின் ஆகும் சுடுகாடு!

விற்பனையாளர்

இல்லாத இடங்களில்...

குயில் இதழைப் பெற
விரும்புவோர்
உறுப்பினராகச் சேர்ந்துகொள்க.
விற்பனைசெய்ய விரும்புவோர்
எழுதுக.

ந்தியை எதிர்ப்போம்!

செந்தமிழ்த் தாய் அழைத்தாள்
எம்மைச்
செந்தமிழ்த் தாய் அழைத்தாள்
வரும்
இந்திக் குளம் பதைத்தாள்
எங்கள் தோள்
வெற்றித் தோள்! இங்கு
வந்தால் பகைப்படை
தூள்! தூள்! தூள்!

எங்களை நோக்கிச் சொன்னாள்
தாய் எங்களை நோக்கிச் சொன்னாள்
வந்தால்
இந்தியை நீக்கச் சொன்னாள்
தண்டிப்போம்
கண்டிப்பாய்
எங்கே வாழ்வ தந்த
நாய்? நாய்? நாய்?

பைந்தமிழைக் காப்போம்
எங்கள் பைந்தமிழைக் காப்போம்
இந்திப்
பட்டாளத்தைத் தீர்ப்போம்
பதுங்கோம்
ஒதுங்கோம்
முந்திடும் வேங்கைகள்
நாம்! நாம்! நாம்!

இருக்கும் தமிழ்ச் சோலை
நாம் இருக்கும் தமிழ்ச் சோலை
தனில்
இந்திக் கென்ன வேலை?
இங்கினிமேல்
கால் வைத்தால்
உரிந்துபோம் உடம்பின்
தோல்! தோல்! தோல்!

பிறப்பொக்கும்

துரை. மாணிக்கம்

பிள்ளை பிறந்தது; பிறக்கும் போதே
கொள்ளை அழகதன் கூடப் பிறந்ததே!

உறுப்புகள் யாவும் அதனுடன் பிறந்தன.
கறுப்பு நிறமும் கூடவே பிறந்தது.

மற்றவர் பெற்ற மருத்துவ மனையில்தான்,
பெற்றெடுத் தாளதைப் பெற்ற பொற்றொடி!

"பிறந்தது ஆணு பெண்ணு" என்றனர்;
அரும்பெரும் மகிழ்வோ "டாணே" என்றாள்.

"அச்செலாம் உன்போல்" என்றனர்;அதன்பின்
உச்சி குளிர்ந்தாள்; உவகை வழிந்தது.

"பிறந்த குழந்தையின் பிறப்பென்ன" என்றனர்
"பிறந்தது மனிதப் பிறப்பே" என்றாள்,

"குழந்தையின் குலத்தைக் கேட்டோம்" என்றனர்
"பழந்தமிழ்க் குல"மெனப் பாவை மொழிந்தாள்

"அப்படி என்றால் அதுவென்ன சாதி?"—
இப்படிக் கேட்கவே எழுந்தாள் நங்கை;

"கண்ணொடு பிறந்தது: காதொடு பிறந்ததே"
உண்ணும் வாயொடும் உடலொடும் பிறந்ததே;

நலத்தொடு பிறந்தது: நானறிய எந்தக்
குலத்தொடும் பிறக்கிலை: குணத்தொடும் பிறக்கிலை;

தூய்மை உடலொடும் தூய்மை அறிவொடும்
தூய்மை உளத்தொடும் தோன்றிய குழந்தைக்கு

ஏது சாதி? இழிவுயர் வெல்லாம்?
தீதிலாப் பிறப்பைத் தீப்பிறப் பாக்குறீர்!

என்று மொழிந்தாள் ஏந்திழை:
நின்று கேட்டவர் நகர்ந்தனர் விரைந்தே!

★

எது சரி?

சு. குமாரசுவாமி
தமிழ்ப்பேராசிரியர் – புதுவை.

நன்னூற்குப்பலர் உரையெழுதி யுள்ளனர். அவர்களுள், ஆசிரியர் கா. நமச்சிவாய முதலியாரும் ஒருவராவர். இவர் மெய்யீற்றுப் புணரியலிலுள்ள "லளவேற்றுமை யிற்றடவும் ......என்ப" (ந. சூ. 227) என்னும் சூத்திரத்திற்கு எழுதியுள்ள பொருள் சரியா? என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதற்கண், இச் சூத்திரத்திற்குப் பிறரெல்லாம் கொண்ட உரையைக் காண்போம். அது வருமாறு :—

லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப

என்பது சூத்திரம்.

பொருள் : லகர ளகரமாகிய இரண்டு மெய்யீறுகளும் வல்லினம்வந்தால் வேற்றுமைக்கண் முறையே றகார டகார மெய்களாம்.

உ-ம் கல் + குறை = கற்குறை
முள் + குறை = முட்குறை

அல்வழிக்கண் றகார டகாரங்களுடனே உறழ்வனவாம்.

உ-ம் கல் + குறிது = கல்குறிது, கற்குறிது
முள் + குறிது = முள்குறிது, முட்குறிது

இருவழிக்கண்ணும் மெல்லினம் வந்தால் முறையே னகார ணகாரமெய்களாம்.

உ-ம் கல் + மாண்டது = கன்மாண்டது
முள் + மாண்டது = முண்மாண்டது
கல் + மாட்சி = கன்மாட்சி
முள் + மாட்சி = முண்மாட்சி

இடையினம் வந்தால் இயல்பாம்.

உ-ம் கல் + யாது = கல்யாது
முள் + யாது = முள்யாது
கல் + யாப்பு = கல்யாப்பு
முள்+யாப்பு = முள்யாப்பு

என்று சொல்லுவர் புலவர் என்பதாம்.

இதனால் அல்வழியில் உறழ்ச்சி முடி[illegible] மட்டும் உரையாசிரியர்கள் பலரும் கொண்[illegible] ளார்கள் என்பது புலனாகிறது.

நமச்சிவாயரவர்கள் அல்வழியில் 'அவற்றோ[illegible]டுறழ்வும்' என்பதற்கு மட்டும் மாறுபட்டு[illegible] பொருள் கூறியுள்ளார்கள். அது வருமாறு:–

அல்வழிக்கண் (லகர ளகரங்கள்) றகர டகரங்களாதலோடு திரிந்தும் திரியாதும் விகற்ப[illegible]மடைதலும் ஆகும் எனப் பொருள் கூறி,

கல்	+	தீது	=	கற்றீது
வில்	,,	படை	,,	விற்படை
,,	,,	புருவம்	,,	விற்புருவம்
முள்	,,	தீது	,,	முட்டீது
,,	,,	படை	,,	முட்படை
,,	,,	பல்	,,	முட்பல்

(என லகர ளகரங்கள் வல்லினம் வர அல்வழியில் றகர டகரங்களாகத் திரிந்தன)

கல் + குறிது = கல்குறிது, கற்குறிது
முள் + குறிது = முள்குறிது, முட்குறிது)

(என வல்லினம்வர அல்வழியில் உறழ்ந்தன)

என உதாரணங்களும் காட்டியுள்ளார்கள்.

இவ்வாறு நமச்சிவாயரவர்கள் "அல்வழி அவற்றோடுறழ்வும்" என்பதற்கு, அல்வழியில் லகர ளகரங்கள் றகர டகரங்களாதலோடு திரிந்தும் திரியாதும் விகற்பமடைதலும் எனப் பொருள் கொண்டது பொருந்தாது.

முதலில் நமச்சிவாயரவர்கள் இவ்வாறு பொருள்கொள்ளக் காரணம் யாது என்பதை நோக்குவோம்.

"அல்வழி அவற்றோடுறழ்வும்" என்னும் தொடரில் காணப்படும் ஒடு உருபேற்றுள்ள 'அவ்' என்னும் பன்மைச் சுட்டுப்பெயர் 'லளவேற்றுமையிற்றடவும், என முன்னர் வேற்று

க்கு விதித்த திரிந்துவரும் புணர்ச்சி யிலக்க
கங்களையே குறிக்கின்றதெனவும்,

(அதனால் கற்றீது, விற்படை, முட்படை என்பனவற்றை அல்வழியில் உறழாது திரிந்து வருவதற்கு உதாரணமாகக் காட்டினர்.)

உறழ்ச்சி என்பது (அங்ஙனம் திரிந்துவருதலையன்றி) ஒருகால் இயல்பாகியும் ஒருகால் திரிந்தும்வரும் விகற்பப் புணர்ச்சியையே குறிக்கின்றதெனவும்,

(அதனால் கல்குறிது, கற்குறிது முள்குறிது, முட்குறிது என்பனவற்றை அல்வழியில் உறழ்ந்து வருவதற்கு உதாரணமாகக் காட்டினர்)

அவர் கருதியதேயாம். அது சரியன்று.

லளவேற்றுமையிற்றடவும்.........என்ப'' (ந. சூ. 227) என்னும் சூத்திரத்தால் லளவீற்றுப் பொதுப்புணர்ச்சியைக் கூறத்தொடங்கி 'லளவேற்றுமை யிற்றடவும்' என்பதனுல் லளக்கள் வலிவரின் வேற்றுமையில் றடக்கள் ஆம் என்று கூறினுர். அல்வழியில் வலிவரின் லளக்கள் உறழும் என்று கூறவந்தவர் இன்ன தன்மையுடன் (றகர டகரங்களாதலுடன்) உறழும் என்பதைக் குறிக்கவே, மேல் வேற்றுமைக்கு விதிக்கப்பட்ட இலக்கணத்தால் பெறப்பட்ட றகர டகரங்களைச் சுட்டி அவற்ருேடென்றுர். மேல் றகர டகரங்கள் பெறப்பட்டிலவாயின். அல்வழியில் லளக்கள் றகர டகரங்களோடு உறழ்வும் என்றே கூறியிருப்பர் வாளா உறழ்வும் என்று மட்டும் கூருர். கூறின் அது பயனில் கூற்ருய் முடியும். என்னே, உறழ்ச்சி என்பது ஒரு புணர்ச்சி, இரண்டு விதமாக வருதலைக் குறிக்கும். வாளா உறழ்வும் எனக்கூறின், அவ்விருவகை இவையென விளங்காவாகலின்.

உறழ்ச்சி முடிபு விளங்கவேண்டிய இடங்களிலெல்லாம் ஆசிரியர் இன்ன தன்மையோடு உறழும் என விதந்தே கூறுவர் இதனைப் பின் வருவனவற்ருலறிக.

''மின்றவ் வொடுபொருஉம்வேற்றுமை வழியே''
(ந. சூ. 213) எனவும்

''மின்பின் பன்கன் றெழிற்பெய ரனைய
கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்'' (217) எனவும்

''தன்னென் னென்பவற் றீற்றனவ் வன்மையோ
டுறழு நின்னீ றியல்பா முறவே'' (ந. சூ. 218) எனவும்

''யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்'' *(224)* எனவும்

வரும் இச் சூத்திரங்களில் கூறப்படும் உறழ்ச்சிகள் இன்ன இன்ன தன்மையோடு உறழ்ந்து வரும் என்பதை விளக்கவே, 'றவ்வொடு பொருஉம் எனவும் [உறழ்ச்சி, விகற்பம், பொருதல் என்பன ஒருபொருட் சொற்கள்] மென்மையோடுறழும், எனவும், 'வன்மையோடுறழும்' எனவும், 'இனத்தோடுறழ்தலும்' எனவும் கூறினர்.

இவற்றுள் றவ்வொடு பொருஉம் என்பது றகரமாதலோடு திரிந்தும் திரியாதும் வருதல் எனவும் மென்மையோடுறழும் என்பது மெல்லினம் மிக்கு வருதலோடு வலியேனும் மெலியேனும் மிக்கு வருதல் எனவும், வன்மையோடுறழும் என்பது வல்லினமாதலோடு திரிந்தும் திரியாதும் வருதல் எனவும், இனத்தோடுறழ்தலும் என்பது இனம்மிகுதலோடு இனமேனும் வலியேனும் மிகுந்து வருதல் எனவும் பொருள் படாமையைக் காண்க.

அற்றேலஃதாக,

ஆவி யரழ இறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே
(ந. சூ. 161)

என்னும் சூத்திரத்திற் காணப்படும் 'இயல்பொடு விகற்பே' என்பதற்கு இயல்பும், (ஒருகால் இயல்பாகியும் ஒருகால் மிக்கும் வருதலாகிய) விகற்பமும் எனப்பொருள் கொண்டாற்போல ஈண்டும் கொளல்தகும் எனிற் கூறுதும்.

ஆண்டு, 'விகற்பு' என்பது இன்னதன்மையுடன் என்பது விளங்கிக் கிடத்தலின் 'இயல்பு' எனபது இன்ன தன்மையோடு விகற்பம் என்பதைக் குறிக்க வாராது இயல்பையே குறிக்க வந்தது எனவே 'இயல்பொடு விகற்பே' என்பதற்கு இயல்பும் விகற்பமுமாம் எனப்பொருள் கோடல் தகும்.

(அடுத்த இதழில் முடியும்.)

வெற்றி முழங்குமடா!

வையூர், கோ. கலியபெருமாள்.

அன்னிய மன்னவர் வந்து வணங்கிட
ஆண்டவர் யாவரடா?
தன்னிகர் இன்றித் தமிழ்த்திரு நாட்டைத்
தனித்தர சாண்டவர்யார்?

ஈழம் இமையம் எலாங்கொடி நாட்டி
இருந்தர சாண்டவர்யார்?
வேழம் அனையவர் வெற்றித் திறல்மிகும்
வேந்தர் தமிழரடா?

ஆளப் பிறந்தவர், அன்னியர் நாட்டிலும்
ஆட்சி நடத்தியவர்,
மாளப் பிறந்தவ ரோ? அஞ்சி நாளும்
வடக்கை வணங்குவரோ?

பூனைகளோ? கடுந் தானைக ளோ? இத்தப்
பூந்தமிழ் நாட்டிலுள்ளோர்!
யானைக ளோ? வெறும் பானைக ளோ? இவர்
யாரெனக் கூறிடுவீர்?

வெம்புலி என்னினும் நேரில் எதிர்த்திடும்
வெற்றித் தமிழர்களோ?
அம்புலி என்றதும் அஞ்சி நடுங்கி
அடுக்களை செல்பவரோ?

வீட்டினுள் நாய்கள் புகுந்து நுழைவதை
வேடிக்கை பார்ப்பவரோ?—சொந்த
நாட்டினுள் ளே, பகை நாட்டினர் ஆட்சியை
நத்திக் கிடப்பவரோ?

வானம் இடிக்கினும் வையம் பிளக்கினும்
வண்டமிழ் நாட்டிலுளார்
மானம் பெரிதென வாழ்ந்தவர் என்னும்
மாண்பை மறந்தனரோ?

அடிமைக ளாகஓர் ஆயிரம் ஆண்டுகள்
அல்ல லடைவதுண்டோ?
மடிதுயில் நீங்கி வரும்புலி என்னவே
மறத்தமிழ் மக்களெல்லாம்,

இடிஎனும் ஓசை நிலத்தைப் பிளந்திட
எங்கும் எழுச்சிபெற்றுர்
கொடியவர் சாய்ந்தனர், செந்தமிழ் நாட்டினர்
கூடினர் என்றதுமே!

விலங்கு கழன்றிடும்! மேதினி எங்கணும்
வெற்றி முழங்குமடா!
இலங்கு தமிழ்த்திரு நாடு தனியர
சென்று முழங்குமடா!

—★—

கூவு குயிலே!

மா. சுப்பையா

எடுப்பு

கூவு குயிலே! உரக்கக் கூவுகுயிலே!—நம்
கொள்கை யதைஎடுத்துக் கூவுகுயிலே!

தொடுப்பு

தூவுகுயிலே! பரக்கத் தூவு குயிலே!—நம்
துயரைத் தரணியெங்கும் தூவுகுயிலே!

முடிப்பு

சாதி ஒழிகவென்று கூவுகுயிலே;—கொடுஞ்
சமய மழிகவென்று கூவுகுயிலே;
நீதி நிலைக்கவென்று கூவுகுயிலே;—மண்ணில்
நேர்மை தழைக்கவென்று கூவுகுயிலே;—
(கூவு)

ஒன்றே குலமிதனை யோதுகுயிலே;-நமக்(கு)
ஒருவனே தேவனென்று கூவுகுயிலே;
நன்றே இதைமறுத்தல் தீதுகுயிலே;-இதை
நம்ப மறுப்பவனை மோதுகுயிலே; (கூவு)

செம்மைத் தமிழ்செழிக்கப் பாடுகுயிலே;-பர்மா,
சிங்களம், சாவகத்துக் கோடுகுயிலே;
நம்மைப் பழிப்பவரைச் சாடுகுயிலே;-நீ
நம்மருங் கொள்கைதனைப் பாடுகுயிலே;
(கூவு)

தமிழன் தமிழனென்று செப்பு,குயிலே—நாம்;
தனியர சாகவென்று செப்பு,குயிலே;
தமிழன் தலைகவிழ்தல் தப்புகுயிலே;—அந்தத்
தன்மான மற்றவனைத் துப்பு,குயிலே; (கூவு)

கங்கை கடந்தொருவன் வில்பொறித்ததும்,—விசயன்,
கனகன் திருமுடியைக் கல்நெறித்ததும்,
மங்கை மறப்புலியை யோட்டியதுவும்,—இமய
மலையில் புலிக்கொடியை நாட்டியதுவும்;(கூவு)

நீதிக் குயிர்நீத்த செழியனையும்;-நம்
நீண்ட வரலாற்று வழியினையும்,
மேதினி யில்எடுத்துக் கூவுகுயிலே;—நாம்
மீண்டும் அதையடையக் கூவுகுயிலே! (கூவு)

—★▭★—

இது செய்தி

தலைவர்கள்..?

பிரசாத், நேரு, காந்தி, படேல், நௌரோஜி, திலகர், சிவாஜி இவர்களே இந்தியத்தலைவர்கள் என்று பம்பாய் அரசாங்கம் விளக்கி அறிக்கையிட்டுள்ளதாம்.

இவர்களின் படங்களை மட்டுமே அரசாங்க அலுவலகங்களிலும், கல்வி நிலையங்களிலும் வைக்கலாமாம்-ஏனையோர் படங்களை மாட்டக்கூடாதாம்.

எப்படிப் புரியும்..?

தமிழ்நாட்டிலிருந்து வடநாட்டுக்குப் பணம் எப்படிப் போகிறது வண்டியில் போகிறதா விமானத்தில் போகிறதா கணக்குக் காட்டுங்கள் என்று ஜார்ஜ்டவுன் ஜவஹர் தேசிய வாலிபர்சங்க ஆண்டு விழாவில் பேசும்போது எதிர்க்கட்சியினரைக் கேட்டாராம் காமராஜர்.

மூளைக் கோளாறு

இந்தியாவில் உள்ள எல்லா மொழிகட்கும் பொதுவான எழுத்துக்களைக் கையாளவேண்டும்.

அதாவது இந்தி எழுத்துக்களையே எல்லா மொழிகளுக்கும் பயன்படுத்தவேண்டும்.

தமிழ் அ ஆ முதலிய எழுத்துக்களையும் இந்தி எழுத்துக்களிலேயே எழுதவேண்டும்.

இவ்வாறு டெல்லி மந்திரி கோபால் ரெட்டி பெங்களூரில் பத்திரிகை நிருபர்கள் பேட்டியின் போது தெரிவித்தாராம்.

நடக்கலாமா?

கேரள அரசாங்கத்தார் நடத்திவரும் பஞ்சாலையில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் 5 பேரை விலக்கியதன் காரணமாக அங்குக் கடந்த ஒரு மாதமாய் மறியல் போராட்டம் நடத்தி வருகிறார்கள் பிற தொழிலாளர்கள்.

மேற்படி போராட்டத்தில் 1000 பேருக்குமேல் இதுவரை கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களாம்.

வடவருக்கு மூளைச்சுரம்

ஆண்டாண்டுதோறும் வடநாட்டுப் பகுதிகளில் மூளை சுரம் ஏற்படுவதும் அதனால் இறப்பு நேரிடுவதும் உண்டு. இந்த ஆண்டிலும் டெல்லி முதலான இடங்களில் ஏற்பட்டிருக்கிறதாம். இது குழந்தைகளுக்கே வருகிறதாம் பல குழந்தைகள் இறந்துவிட்டனவாம்.

டெல்லி பொது உறவுத்துறை, இவ்வாண்டில் வழக்கத்தைக்காட்டிலும் அதிகமான இறப்பு நேர்ந்திருப்பதாகக் கருத முடியாதென்று அறிவித்திருக்கிறது.

நம்புகிறாராம்!

கேரள சென்னை அரசுகட்கிடையே பரம்பிக்குளம் நீரைப் பகிர்ந்துகொள்வது பற்றி நட்பு முறையிலும் விட்டுக்கொடுக்கும் முறையிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருக்கின்றன.

தகராறு இப்போது மத்தியஸ்தத்திற்கு விடப்படுகிறது.

முடிவு சென்னைக்குச் சாதகமாகவே இருக்கும் என்று நம்புகிறேன்.

சென்னை விவசாய மந்திரி பக்தவத்சலம் பல்லடம் விவசாயிகள் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இன்னும் பிழைக்கலாம்

காங்கிரஸ் காரியக்கமிட்டியின் இரண்டுநாள் கூட்டத்தில் சென்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடந்த உப தேர்தல்களில் காங்கிரசுக்கு ஏற்பட்ட லாப நட்டம் பரிசீலிக்கப்பட்டதாம்.

பொதுத்தேர்தலுக்குப் பிறகு ஜூன் மாதம் வரை 46 உபதேர்தல்கள் நடந்திருக்கின்றன அவற்றில் காங்கிரசுக்கு ஏற்பட்ட லாபம் ஒரிசாவில் 2. சென்னையில் 1. உ. பி. யில் 1.

நட்டம்: ஆந்திராவில் 2. பம்பாய், ம. பி. மைசூர், ராஜஸ்தான் ஆகிய இடங்களில் ஒவ்வொன்று.

இச்செய்தியைப் பொதுச்செயலாளர் "ஸ்ரீமன் நாராயண் வெளியிட்டார். மேலும் அவர்: பத்திரிகைகளில் காண்பதுபோல நிலைமை மோசமாகிவிடவில்லை. இங்கும் அங்குமாகச் சில இடங்களில் காங்கிரஸ்தோற்றிருக்கிறது. ஆனால் உத்திரப்பிரதேசம், ஒரிசா, சென்னை ஆகிய விடங்களில் முக்கிய வெற்றிகள் கிடைத்துள்ளன" என்றும் குறிப்பிட்டார்.

பெயர். தூய தமிழ்ச்சொல்லென்பதை அறிந்து மகிழ்க.

மா

இஃது மஹா என்ற வடசொற் சிதைவாம் என்னே மடமை!

மா எனின் பெரியது, சிறந்தது விலங்கு, மாமரம் முதலிய பல பொருள் குறிக்கும் உரிச்சொல் என்று, வடமொழி என்பது இந்நாட்டிற் புகுவதற்கு முன்னமே தமிழ்நூல் கூறிற்று.

பெரிது என்ற பொருளில், மாப்பெரிய என்று எழுதவேண்டும் (இடையில், ப் விரிக்காவிடில் மா பெரிது) மா என்பது மகா என்ற வடசொற் சிதைவு என்று கொண்டதாகிவிடும். மா இருக்க மஹா எதற்கு?

கண்ணியம்

இது கண்யம் என்பதன் சிதைவு என்பர் பார்ப்பனரும் அடியாரும் கண்ணல், எண்ணல், சிறத்தல் என்பன ஒன்றே.

கண்ண கண்ணிய எனச் செய, செய்யிய எனும் வாய்பாட்டு வினையெச்சங்களாயும் வரும்.

கண்ணியம் இகரச் சாரியையும் அம் இறுதி நிலையும் பெற்ற பெயர். வடவர் சொல்லும் கண்யம் வேறு தமிழர் கொண்ட கண்ணியம் வேறு என அறிதல் வேண்டும்.

பிழை திருத்தம்

சென்ற இதழ் (15-7-58) 8ஆம் பக்கத்தில் நான்காம் வெண்பா, மூன்றும் அடியில் செந்தமிழ்ச்சொல் என்றிருப்பதைச் செழுந்தமிழ்ச்சொல் என்றும், 14 ஆம் பக்கத்தில் "அமிழ்துக்கும் கண்டுக்கும்" என்று தொடங்கும் வெண்பா, இரண்டாமடி இறுதியில் தமிழ்த்தாய் என்றிருப்பதைத் தமிழ்த்தாயும் என்றும் திருத்திக் கொள்க.

<u>மருத்துவப் பகுதி</u>

என்புருக்கி

"சித்தன்"

இன்தமிழ்க்குப் பொன்னாட்டுக் கிடுக்கண் என்றால்
இடியேறுப் போர்வாளை ஏற்குந் தம்பீ!
இன்றிந்தத் திருநாட்டின் இதயந் தன்னில்,
ஈட்டியென 'என்புருக்கி' இருத்தல் பாராய்!
உன்னலத்தைத் தேய்க்குமொரு பகையீ தப்பா!
உயிர்வைத்து வதைக்கும்நோ யிதுவொன் றேயாம்!
முன்னிதனைப் போக்காயேல்—கடல்கோள் தன்னில்
முத்தமிழும் போனதுபோல் - நாடே போகும்!

தூங்குபவ ரில்லத்தில் கள்ளன் நெஞ்சத்
துணிவுடனே நுழைதல்போல், வறுமை மிஞ்சி
ஏங்குகின்ற மக்களுடல் இடமாய்க் கொண்டிங்
கின்னல்தரும் கொடும்பாம்பாய் வளரும் இந்நோய்
வேங்கைநிகர் திருநாட்டார் உயிரை. நாளும்
வில்லின்றி, வாளின்றி, வேலு மின்றிப்
பாங்காகக் கொல்லுமிதைக் கொல்லல் வேண்டும்!
படிமிசைநம் முதல்வேலை அதுதான் கண்டாய்!

இருமலெனில் மருத்துவரை நாடல் நன்றாம்;
இதன்குறிகள் இயம்பக்கேள்: இந்நோ யுற்றான்
இருமலுடன் பெருமல்சேய் திரவைத் தீர்ப்பான்!
எடைகுறையும்; உடலிளைக்கும்: காய்ச்சல் காணும்!
பெரிதூற்றாய்க் கபத்தோடு குருதி கொட்டும்;
பேச்சடைக்கும் மூச்சடைக்கும் வாழ்வை உள்ளம்
அருவருக்கும்; தாய்கூட அருவ ருப்பாள்;
அருந்துமுண வினிக்காதே; அகம்ஏற் காதே!

தடுப்புமுறை அறிந்திடுக: நோய்கண் டார்க்குத்
தனியிடந்தா; எச்சில்உணேல்; அன்னார்க் கான
படுக்கையினில் உறங்குவதும், அறையை மூடிப்
பலரவரோ டுறங்குவதும் பழுதாம்; அன்னார்
உடுத்தஉடை வெந்நீரிட் டுலர்த்த; எங்கும்
உமிழ்வாரஃ தொப்பாதே; குழந்தை தன்னை
எடுத்தவர்தாம் முத்தமிட இடந்த ராதே!
இவைசெய்ய நோய்பரவா திருக்கும் சொன்னேன்!

சத்துணவே உண்டிடுக; பழங்கள் நன்றாம்
சாராயம் ஆகாது; முட்டை யுண்க;
பத்துணவே ஆனாலும் பாலுக் கீடோ?
பயிற்சியினால் உடலுறுதி படுதல் வேண்டும்;
மெத்தநலந் தருங்காற்றில் உலாதல் நன்றாம்;
மேலான பழக்கங்கொள்; நிமிர்ந்து நிற்பாய்;
சத்துண்டாம் இறைச்சியினால்; என்சொல் கேட்பின்
சாவேது நூறாண்டுக் குள்ளிங் கப்பா!

சொல்லேடி தோழி!

வித்துவான்: பா. முத்து.

அன்றொருநாள் அவர்வந்தார் ஆர்கடலின் ஓரம்
அமர்ந்திருந்தோம். அணைத்தணைத்தே இதழ்சுவைக்க வைத்தார்;
தென்றலது நடமாடத் தண்ணொளியைத் திங்கள்
தெளித்ததடி! உடலெல்லாம் தெளித்ததடி இன்பம்!
இன்றவரோ இங்கில்லா வேளையிலே என்னை
எரிக்குதடி இந்நிலவு; எழுப்புதடி அந்தக்
குன்றுநிகர் தோளானின் குளிர்நினைவை என்ன
குறைசெய்தேன் நிலவுக்கே? சொல்லேடி தோழி!

வெண்ணிலவில் அவர்வந்தார்; உடலெல்லாம் இன்ப
வெறியேறச் செய்திட்டார்; அணைத்திட்டார்; நெஞ்சின்
உண்ணிலவும் நிறை இன்பம் அளித்திட்டார்; எண்ண
உறுத்துதடி உளம்; இந்தக் கனல்நிலவு வந்தென்
கண்ணிலவச் செய்யுதடி அவர்நினைவை எல்லாம்;
கருத்தழிந்து போகுதடி நானென்ன செய்வேன்?
வண்ணநிலா வருத்தும் வகை யாதிழைத்தேன்? என்னை
வாட்டுதற்குக் காரணமென்? சொல்லேடி தோழி!

பாலொத்த வெண்ணிலவில் அவர்வந்தார்; இன்பம்
பாய்ந்தோடச் செய்திட்டார்; எனையணைத்துக் கொண்டே
சேலொத்த விழியாளே! உன்முகத்துக் கிந்தச்
செழுநிலவும் நிகராமோ? என்றாரே அச்சொல்
கோலத்து மதிகேட்டுக் குறையுற்ற தோடி?
குறைஎன்றால் என்தவறு? உள்ளத்தைக் குத்தி
வேலொத்த அவர்பிரிவு வாட்டுங்கால் என்மேல்
வெந்தணலை வீசுவதேன்? சொல்லேடி தோழி!

புதுநிலவில் அவர்வந்தார் மெய்யெல்லாம் இன்பம்
புரையோடச் செய்திட்டார்; இழுத்தணைத்துக் கொண்டே
"மதுக்குடமே! மலர்க்காடே! மகிழ்க்கடலே! என்றன்
மதிகளிக்க இசைக்கின்ற மாங்குயிலே!" என்றே
புதுப்புதிதாய் உவமைபல கூறிநின்றார்; இன்பப்
புதரிடையே கட்டுண்டோம்; அந்நிலையை எண்ண
மதிகுழம்பிப் போகுதடி! எரிநிலவுக் கென்ன
மனக்குறையை யான்செய்தேன்? சொல்லேடி தோழி!

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: **பாரதிதாசன் புதுச்சேரி.**
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.